பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இக் கூட்டத் தொடரின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர், பிற்பகல் 3.01 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கபெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

168. சென்னை கில்ட் ஆப் சர்வீஸ் அமைப்பினால் விற்பனை செய்யப்படும் அச்சிடப்பட்ட பொருட்களுக்கு விதிக்கக்கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 22—3-1988 ஆம் நாளிட்ட 457ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

169. எரிசக்தி சேமிப்பு கருவிகளின் விற்பனைக்காக விதிக்கக்கூடிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—9—1987 ஆம் நாளிட்ட 1013ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

170. சூரிய சக்தி எரிசாண வாயு மற்றும் காற்று சக்தி ஆகியவற்றில் பயன்முறைக்காக வடிவமைக்கப்பட்ட புதுப்பிக்கக் கூடியவையான எரிசக்திச் சாதனங்களின் விற்பனைக்காக